# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 19 மடல் 10

அக்டோபர் 2019

₹1.00

## மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துக் கல்வி நிலையங்களுக்குப் பயணம்



மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன், தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவச் சேவைகள் துறை இயக்குநர் திரு. ஏ. ஞானசேகரன் இ.ஆ.ப. ஆகியோர் இடம்பெற்ற குழுவினர், 06.09.2019 முதல் 15.09.2019 வரை ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் தேர்வு செய்யப்பட்ட கல்வி நிலையங்களைப் பார்வையிட்டனர். குழுவினரின் முதன்மையான நோக்கம் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துக் கல்வி நிலையங்களில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்படும் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை எடுத்துக்கூறவும்; அக் கல்வி நிலையங்களுடன் ஆசிரியர், அறிவியலாளர் மற்றும் மாணவர் பரிமாற்றம் மற்றும் கூட்டிணைவு ஆராய்ச்சி மேற்கொள்ளவும்; கால்நடை மருத்துவ அறிவியல் புலங்களில் இருதரப்பு ஆய்வுக்களங்கள், தடுப்பு மருந்து உருவாக்கம் மற்றும் தொற்று நோய்களை அடையாளங்காணவும்; ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் இந்தியாவில் நீடித்த கால்நடை வளர்ப்பிற்குக் கலப்புப் பண்ணை முறைகளை மேற்கொள்ளவும், பருவநிலை மாற்றங்களை எதிர்கொண்டு கால்நடை நல மேம்பாட்டிற்குப் புதிய வழிமுறைகளை அடையாளங்காணவுமாகும்.

குழுவினர் சிட்னிப் பல்கலைக்கழகத்தை 09.09.2019அன்று பார்வையிட்டு, பேராசிரியர் டேவிட் எமெரி, இணைப் பேராசிரியர்கள் நவநீத் தாண்ட் மற்றும் ஜான் ஹவுஸ், உதவிப் பேராசிரியர் ஆயுரியல் ப்ர்டி, முதுநிலை ஆராய்ச்சியாளர் மெஹன் காத்கென் ஆகியோருடனான சந்திப்பில் பங்கேற்றனர். மேலும் அப் பல்கலைக்கழகத்தில் இருந்த கட்டமைப்பு வசதிகளைப் பார்வையிட்டனர். இவ்வாறு பார்வையிட்டதன் பயனாக மாணவர்கள் / பேராசிரியர்கள் / அறிவியலாளர்கள் பரிமாற்றத் திட்டம், கால்நடை மருத்துவ அறிவியலின் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான உயராய்வு நிலையம் சேலத்தில் ஏற்படுத்துவதற்கு உதவி, ஒன்றிணைந்து



கூட்டிணைவு ஆராய்ச்சிகளை முன்மொழிதல் இவற்றுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

10.09.2019அன்று மெல்போர்ன், லா ட்ரோப் பல்கலைக்கழகத்தைக் குழுவினர் பார்வையிட்டு, அப்பல்கலைக்கழக வேளாண் உயிர் அறிவியல் மையத்தில் பேராசிரியர் டேரி ஸ்பிதில், இணைப் பேராசிரியர் முனைவர்



ட்ராவிஸ் பெட்டோ ஆகியோரைச் சந்தித்தனர். இச்சந்திப்பின் பயனாக நோய் கண்டறிதல், தடுப்பூசி உருவாக்கம், கூட்டிணைவு ஆராய்ச்சி, மாணவர் / ஆசிரியர் / அறிவியலாளர் பரிமாற்றத் திட்டம் இவற்றுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

க்ளேடன், மோனஷ் பல்கலைக்கழகத்தின் டாக்டர் விக்னேஷ் இரத்தினசாமி மற்றும் டாக்டர் சுஷ்மா ஆனந்த் ஆகியோர், 10.09.2019அன்று மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் குழுவினரை அன்புடன் வரவேற்று, தங்கள் பல்கலைக்கழகத்தின் தற்போதைய ஆராய்ச்சிப் பணிகளை விளக்கமாக எடுத்துரைத்தனர்.

மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் குழுவினர் சர்ச்சிலில் உள்ள ஆஸ்திரேலிய பெடரேஷன் பல்கலைக்கழகத்தை 11.09.2019அன்று பார்வையிட்டு, அப் பல்கலைக்கழகத்திற்கும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் இடையே மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்றம், பன்னாட்டு ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான வாய்ப்பு இவை தொடர்பாக அப் பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியர் டேவிட் பியட்ராபிடா (ஆராய்ச்சி இணை முதல்வர்), பேராசிரியர் டலால் யூசுப் (துணைவேந்தர், பன்னாட்டுப்



பணி), இணைப் பேராசிரியர் வென்டி ரைட் ஆகியோருடனான கலந்துரையாடலில் பங்கேற்றனர். இச் சந்திப்பின் பயனாக நோய் கண்டறிதல், தடுப்பு மருந்து உருவாக்கம், ஆய்வுப் பணி மற்றும் மாணவர் / ஆசிரியர் பரிமாற்றம் இவை குறித்து ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளத் திட்டமிடப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் குழுவினர் 12.09.2019அன்று ஜீலாங், ஆஸ்திரேலியக் கால்நடை நல ஆய்வகம் மற்றும் ஆஸ்திரேலிய ஸ்சிரோ ஆய்வகம் ஆகியவற்றைப் பார்வையிட்டு, ஆஸ்திரேலியக் கால்நடை நல ஆய்வகத் துணை இயக்குநர் டாக்டர் டெப்பிஸ் ஈகில்ஸ் அவர்கள் தலைமையில் பல்வேறு கால்நடை நோய்கள் குறித்துப் பணியாற்றும் பல்வேறு விஞ்ஞானிகள் குழுவினரைச் சந்தித்தனர். இச் சந்திப்பில் பங்கேற்ற 20 விஞ்ஞானிகளுடன் கூட்டிணைவு ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் பிஎஸ்எல்–3 ஆய்வக மேலாண்மைக்கான பயிற்சி வாய்ப்புகள் குறித்து விவாதித்தனர். விவாதத்தின்போது



மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கால்நடைப் பராமரிப்புத் துறையின் வளர்ச்சிக்காகத் தமிழ்நாடு அரசு அளிக்கும் உதவிகளை விஞ்ஞானிகளிடம் தெரிவித்தார். மேலும், தமிழ்நாட்டின் சேலம் மாவட்டத்தில் நிறுவப்படவுள்ள கால்நடை மருத்துவ அறிவியலின் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான உயராய்வு நிலையம் குறித்தும் குறிப்பிட்டார். புதிதாக நிறுவப்படவுள்ள ஆய்வகங்கள் / செயல்பாட்டில் உள்ள ஆய்வகங்களின் மேம்பாட்டிற்கு உதவுதல், தமிழ்நாட்டிற்கு உயர் தொழில்நுட்பப் பரிமாற்றம், கூட்டிணைவு ஆராய்ச்சியில் ஈடுபடல், பரிமாற்றத் திட்டத்திற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ள இசைவு தெரிவித்தல் ஆகியவை இந்தச் சந்திப்பின் பயனாகக் கிடைக்கப்பெற்றன.

நிறைவாக, மாண்புமிகு அமைச்சர் குழுவினர் நியூசிலாந்தின் ஹாமில்டன், கால்நடை மேம்பாட்டுக் கழகத்தை



13.09.2019அன்று பார்வையிட்டு, அதன் புதுமைப் பண்ணை, சிறந்த ஆய்வக வசதி மற்றும் பதப்படுத்தல் வசதிகளை அறிந்துகொண்டனர். மேலும், கால்நடை மேம்பாட்டுக் கழகத்தின் கால்நடை நல மேலாளர் டாக்டர் ஆலா மோகன் அவர்களுடனான கலந்துரையாடலிலும் பங்கேற்றனர்.

## தேசியக் கலந்தாய்வரங்கு




பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்ககத்தில் செயல்பட்டுவரும் உயிர்த் தொழில்நுட்பத் துறை மற்றும் பல்கலைக்கழகத்தின் நாயின ஆராய்ச்சி மையம் மற்றும் இணைப்புத் திட்டக் கண்காணிப்புப் பிரிவுமூலம் "கருத்தடையில் அண்மைக்காலப் போக்குகள்: நாய் மற்றும் பூனைகளில் இனப்பெருக்கக் கட்டுப்பாட்டிற்கான வாய்ப்புகளும் சவால்களும்" எனும் தேசியக் கலந்தாய்வரங்கு, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 19.09.2019 மற்றும் 20.09.2019ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் கலந்தாய்வரங்கைத் துவக்கிவைத்து, கருத்தரங்கு மலர் வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். மேலும், இரத்ததானம் செய்தல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், இரத்ததானம் செய்வோரிடையே ஒரு இணைப்பை உண்டாக்கும் வகையிலும் உருவாக்கப்பட்ட "இரத்தம் 4 செல்லப்பிராணி" எனும் செல்பேசி செயலியை வெளியிட்டார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ், தல்வார் ஆராய்ச்சி பவுண்டேஷனின் ஆராய்ச்சி இயக்குநர் பேராசிரியர் ஜி.பி. தல்வார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிகிச்சையியல் இயக்குநர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கலந்தாய்வரங்கில் நமது நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த 76 பேர் பங்கேற்றனர். 20.09.2019அன்று நடைபெற்ற கலந்தாய்வரங்கின் நிறைவு விழாவில் புதுதில்லி, இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் உயிர் மருத்துவப் பொறியியல் மையப் பேராசிரியர் சுஜாய் கே. குஹா அவர்கள் பங்கேற்றுப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி, நிறைவுரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் முனைவர் பி. ஸ்ரீதேவி அவர்கள் நன்றி கூறினார்.

## ஆய்வக விலங்கு அறிவியல் சான்றிதழ்ப் படிப்பு – 2019

பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக் கல்வி மையத்தின் கீழ் இயங்கும் ஆய்வக விலங்கின மருத்துவப் பிரிவுமூலம் ஐரோப்பிய ஆய்வக விலங்கின அறிவியலாளர்கள் கூட்டமைப்பின் அங்கீகாரம் பெற்ற "ஆய்வக விலங்கு அறிவியல் சான்றிதழ்ப் படிப்பின்" பயிற்சி முகாம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 18.09.2019 முதல் 28.09.2019 வரை நடத்தப்பட்டது. பயிற்சி முகாமைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் 18.09.2019அன்று துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் க. சரத்சந்திரா, கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஜி. தினகர் ராஜ் ஆகியோர் பங்கேற்றனர். அரசு மற்றும் தனியார் நிறுவனங்களைச் சார்ந்த 30 பேர் பயிற்சி முகாமில்



பங்கேற்றனர். 28.09.2019அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஜி. தினகர் ராஜ் அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் பயிற்சி நிறைவுசெய்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். பயிற்சியின் அமைப்புச் செயலாளர் மற்றும் ஆய்வக விலங்கின மருத்துவப் பிரிவுப் பேராசிரியர் முனைவர் சீ. ரமேஷ் அவர்கள் நன்றி கூறினார்.

## பயிலரங்கு

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர்கல்வித் திட்ட நிதியுதவியுடன் "புதிய முறையில் கால்நடை மருத்துவக் கல்வி கற்பிக்கும் கலை"



எனும் பயிலரங்கு, 21.09.2019 முதல் 23.09.2019 வரை நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் தலைமை வகித்தார். திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இலண்டன் ராயல் கால்நடை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்கள் முனைவர் அயோனா சில்வா ஃபிளாட்சர் மற்றும் முனைவர் நைஜில் கூட் ஆகியோர் கால்நடை கல்வி கற்பிக்கும்

முறைகளை விவரித்தனர். தேசிய உயர்கல்வித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி. இராமசுந்தரம் அவர்கள் பயிலரங்கில் பங்கேற்றுப் பயிலரங்கின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பயிலரங்கில் 30 பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறையில் “எழ இயலாத நிலையில் உள்ள மாடுகளைப் பராமரித்தல்”




பற்றிய பயிலரங்கு, 44 கால்நடை மருத்துவர்களுக்காக 30.09.2019அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் கே. பாலசுந்தரம் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நோய்த்தடுப்பு மருந்தியல் துறையின் ஓய்வுபெற்ற பேராசிரியர் முனைவர் பி.எஸ். திருநாவுக்கரசு அவர்கள் சிறப்பு விரிவுரை வழங்கினார்.

### தர மேலாண்மைப் பயிற்சி

பல்கலைக்கழகத்தின் அடிப்படை அறிவியல் புலம்மூலம் ‘தர மேலாண்மை முறைகள் மற்றும் உள்தணிக்கை–ISO/IEC 17025:2017’ எனும் பயிற்சி, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 17.09.2019முதல் 20.09.2019 வரை நடைபெற்றது. 20.09.2019அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவிற்கு அடிப்படை அறிவியல் புல முதல்வர் மற்றும் பயிற்சி இயக்குநர் முனைவர் க. சரத்சந்திரா அவர்கள் தலைமை வகித்தார். பயிற்சியில் 15 பேர் பங்கேற்றனர்.

### பண்ணையாளர் பயிலரங்கு

- காட்டுப்பாக்கம், கால்நடை உணவியல் நிலையத்தில் வேளாண் காடுகள் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆதிதிராவிடர் வகுப்பினருக்கான “காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளை உருவாக்குதல்” குறித்த பயிலரங்கு 26.09.2019அன்று நடைபெற்றது. பயிலரங்கில் 41 விவசாயிகள் கலந்து கொண்டனர்.
- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கோழியின அறிவியல் துறையில் “காடை மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்புப்” பயிலரங்கு 27.09.2019அன்று நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 25 பண்ணையாளர்கள் பங்கேற்றனர்.

### பண்ணையாளர் பயிற்சி

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் “கால்நடை மற்றும் கோழி வளர்ப்பில் நீர்த் தொழில்நுட்பங்கள்” பற்றிய பயிற்சி, கரூர் மாவட்டத்தின் 30 நபார்டு உழவர்



மன்றப் பண்ணையாளர்களுக்காக 12.09.2019 முதல் 14.09.2019 வரை நடத்தப்பட்டது. கரூர், நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் திரு. எம். பரமேஸ்குமார் அவர்கள் 12.09.2019அன்று பயிற்சியைத் துவக்கிவைத்தார். கரூரில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய நீரியல் நிபுணர் முனைவர் ந. முத்துகிருஷ்ணன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். மேலும், இம் மையம்மூலம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகத் தொழில்முனைவோர் பயிற்சி மைய நிதியுதவியுடன் “இலாபகரமான கறவை மாடு வளர்ப்பு மற்றும் மண்புழு உரம் தயாரித்தல்” எனும் பயிற்சி, கரூர் மாவட்டத்தின் 22 பண்ணையாளர்களுக்காக 16.09.2019 முதல் 27.09.2019 வரை நடத்தப்பட்டது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகத் தொழில்முனைவோர் பயிற்சி மைய இயக்குநர் திரு. ஜி. ரங்கநாத பிரபு அவர்கள் 16.09.2019அன்று பயிற்சியைத் துவக்கிவைத்தார்.
- சத்தியமங்கலம், காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையத்தில் ஆத்மா திட்ட நிதியுதவியுடன் 50 விவசாயிகளுக்குக் “கால்நடைகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவம்” குறித்த கண்டுணர் பயணம் மற்றும் பயிற்சி, 13.09.2019 முதல் 14.09.2019 வரை நடத்தப்பட்டது.

### பண்ணைக் குட்டை விரிவாக்கத் திட்டம்

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையப் பண்ணை வளாகத்தில் உள்ள பண்ணைக்குட்டையை மழைநீரைச் சேகரிக்கும் வகையில் தூர்வாரி விரிவுபடுத்தும் பணி, கல்லூரிப் பேராசிரியர்கள் சங்கம் மற்றும் நாமக்கல் ரோட்டரி சங்கம் சார்பில் கூட்டாகச் செயல்படுத்தப்பட்டது. இந்தப் பண்ணைக் குட்டை விரிவாக்கத்தைக் குறிக்கும் கல்வெட்டினை 28.09.2019அன்று பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் பா. மோகன், நாமக்கல் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மருத்துவர் ஆர். அருண், திரு. வி. ராஜசேகரன், திரு. எல். விஜயன் ஆகியோர் பங்கேற்றனர்.

## விருது

- நுண்ணீர்ப் பாசனத்தின் மூலம் 20 விழுக்காடு நீரைச் சிக்கனப்படுத்தி, நீரையும் உரத்தையும் பாசனமுறைகளில் செலுத்தி நீர் சிக்கனத்தின் மூலம் சிவகங்கை மாவட்டத்தில் பயிர்ச் சாகுபடியைக் கூட்டியதற்காகக் குன்றக்குடி, வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நமது பாரதப் பிரதமரின் ஜல் ஷக்தி–முதலாவது தேசிய நீர் மிஷன் விருது–2019,




புதுதில்லியிலுள்ள விஞ்ஞான பவனில் 25.09.2019அன்று நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் மத்திய அரசின் ஜல் ஷக்தி துறை அமைச்சர் மாண்புமிகு கஜேந்திர சிங் செகாவத் மற்றும் ஜல் ஷக்தித் துறையின் இணை அமைச்சர் மாண்புமிகு ரத்தன் லால் கட்டாரியா ஆகியோரால் வழங்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் பத்தாவது மண்டல இயக்குநர் முனைவர் ஒய்.ஜி. பிரசாத், குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சு. செந்தூர்குமரன் ஆகியோர் கூட்டாக விருதைப் பெற்றுக்கொண்டனர்.

- நமது பல்கலைக்கழகத்தின் “விவசாயிக்கு முதலிடம்” திட்ட விவசாயி திரு. ஏ. ஜம்புலிங்கம் அவர்களுக்கு,



01.09.2019அன்று ஐதராபாத், தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மைக் கழகத்தில் நடைபெற்ற அதன் 44ஆவது நிறுவன நாள் விழாவில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் 2019–20ஆம் ஆண்டிற்கான தேசியப் புதுமை விவசாயி விருது, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டது. இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழக நிலையங்கள் மற்றும் மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள் பரிந்துரைத்த 21 விவசாயிகளில் புதுமை விவசாயி விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட 10 விவசாயிகளில் ஒருவரான திருவள்ளூர் மாவட்டம், பந்திகாவனூரைச் சார்ந்த திரு. ஏ. ஜம்புலிங்கம் அவர்கள் குறைந்த விலையிலான மூன்றடுக்குக் கோழிக் கூண்டை உருவாக்கியதற்காக இவ்விருது வழங்கப்பட்டது.

## உலக வெறிநோய் தினம்

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வியல் துறையும் நாமக்கல், கால்நடைப் பராமரிப்புத் துறையும் நாமக்கல் மாவட்டக் கூட்டுறவுப்



பால் உற்பத்தியாளர் சங்கமும் நாமக்கல் ரோட்டரி சங்கமும் இணைந்து உலக வெறிநோய் தினத்தை முன்னிட்டு, மாவட்ட அளவில் நாய்களுக்கான வெறிநோய்த் தடுப்பூசி முகாமை 28.09.2019அன்று நடத்தின. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று முகாமைத் துவக்கிவைத்தார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். நாமக்கல், கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் வி.பி. பொன்னுவேல், நாமக்கல் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கப் பொது மேலாளர் மருத்துவர் பி. சுந்தரவடிவேல், நாமக்கல் மாவட்ட ரோட்டரி சங்கங்களின் பொதுச் செயலர் திரு. பி. சிவசுந்தரம் மற்றும் ரோட்டேரியன் திரு. எல். விஜயன், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மருத்துவ மேலாண்மைக் குழு உறுப்பினர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மேலும், நாமக்கல் நகராட்சி ஆணையர் திருமதி கே.எம். சுதா, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மேலாண்மைக் குழு உறுப்பினர் மருத்துவர் எம். சுந்தரலிங்கம் ஆகியோர் பங்கேற்றனர். முன்னதாக நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஜி. செல்வராஜு அவர்கள் நன்றியுரை ஆற்றினார். முகாமில் நாமக்கல்லின் பல்வேறு வட்டங்களைச் சார்ந்த 5340 நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டது.

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும் கரூர், அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையும் இணைந்து கல்லூரி வளாகத்தில்

30.09.2019 அன்று உலக வெறிநோய் தினத்தைக் கடைப்பிடித்தன. நிகழ்ச்சிக்கு அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் முனைவர் ரோசி வெண்ணிலா அவர்கள் தலைமை தாங்கினார். திருச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர் ஜி. அனிதா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். ஒசூர், நோய் நுண்மக் கட்டுப்பாடு மற்றும் விலங்குவழிப் பரவும் நோய்கள் நிலையத் துணை இயக்குநர் மருத்துவர் டி. ஜோதிபாஸ் அவர்கள் கருத்துரை வழங்கினார். நிகழ்ச்சியில் 40 பேராசிரியர்கள் மற்றும் 150 மாணவர்கள்



கலந்துகொண்டனர். மேலும், இம் மையமும் சென்னையில் உள்ள பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரகமும் இணைந்து கரூர், இந்திய மருத்துவர்கள் சங்க மண்டபத்தில் 30.09.2019அன்று உலக வெறிநோய் தினத்தைக் கடைப்பிடித்தன. கரூர், சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மருத்துவர் ஜெ. நிர்மல்சன் அவர்கள் நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்தார். சென்னையில் உள்ள பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரகத்தின் மாநிலக் கால்நடை மருத்துவ ஆலோசகர் முனைவர் மா. சேகர் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றார். நிகழ்ச்சியில் கரூர் மாவட்டச் சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் உட்பட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் வட்டார மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் என மொத்தம் 95 பேர் கலந்து கொண்டனர்.

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வியல் துறையானது செல்லப்பிராணிகள் வளர்ப்போர் மற்றும் தெருநாய்களின் நலனுக்காக, உலக வெறிநோய் நாளை 01.10.2019அன்று கடைப்பிடித்தது. கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் “இலவச வெறிநோய்த் தடுப்பூசி அளித்தல் மற்றும் வெறிநோயைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் குறித்த விழிப்புணர்வு” முகாமைத் துவக்கிவைத்தார். முகாமில் 61 நாய்களுக்கு வெறிநோய்த் தடுப்பூசி அளிக்கப்பட்டது.

### கிராமத் தத்தெடுப்புத் திட்டம்

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமானது கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின் கீழ் ‘வெறிநோய்த் தடுப்பூசி முகாமை’ 27.09.2019அன்று பண்டுதகாரன்புதூர் கிராமத்திலும், கரூர் கால்நடைப் பராமரிப்புத் துறையுடன் இணைந்து மாவட்டக் கால்நடை பெரு மருத்துவமனையிலும் நடத்தியது. முகாமைக் கரூர், கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் கே. இராதாகிருஷ்ணன் அவர்கள் தொடங்கிவைத்தார். முகாமில் 53 நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டது.

### புரிந்துணர்வு ஒப்பந்தம்




தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தொழில்முனைவோர் இடையே செல்லப்பிராணி உணவு ஆலை வசதியைப் பயன்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் மற்றும் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் ஆகியோர் முன்னிலையில் சென்னை சிகில் பார்மாவின் டாக்டர் கே. சரவணகுமார், கோயம்புத்தூர் திரு. எஸ்.பி. செந்தில்குமார், பல்கலைக்கழகத்தின் சார்பில் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் பா. மோகன் ஆகியோரிடையே 25.09.2019அன்று ஒப்பந்தம் கையெழுத்தானது .

### துணைவேந்தர் பங்கேற்பு




புவனேஸ்வர், ஒடிஷா வேளாண் தொழில்நுட்பப் பல்கலைக்கழகக் கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரியில் 21.09.2019அன்று நடைபெற்ற “பருவநிலை மாற்றப் பாதிப்பும் ஸ்மார்ட் கால்நடை வேளாண்மைக்கான புதுமை முறையை மேற்கொள்ளல்” எனும் குளிர்காலப் பயிற்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பங்கேற்று, “கால்நடை நலம் மற்றும்

உற்பத்தியில் பருவநிலை மாற்றப் பாதிப்பு'' குறித்துச் சிறப்பு விரிவுரை வழங்கினார்.

### முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் 1986ஆம் ஆண்டுச் சேர்க்கைப் பிரிவைச் சார்ந்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சியைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் 28.09.2019அன்று துவக்கிவைத்தார். முன்னாள் மாணவர்கள் 60 பேர், தங்கள் பி.வி.எஸ்சி. படிப்பு நிறைவுற்று 27 ஆண்டுகள் கடந்த நிலையில் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர். இந்நிகழ்வில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ், நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் பா. மோகன் ஆகியோரும் பங்கேற்றனர்.

### மாணவர்களுக்கான பயிற்சி

- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைச் சிகிச்சைத் துறைமூலம் சிகிச்சையியல் துறைகளைச் சார்ந்த 45 முதுநிலைப் பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ''உள்நோக்குக் கருவிகள் கையாளல் மற்றும் பராமரிப்பு'' குறித்த பயிற்சி 27.09.2019அன்று அளிக்கப்பட்டது. பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.
- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை நுண்ணுயிரியல் துறை மூலம் ''விலங்கினத் திசு வளர்ப்பு'' குறித்த செய்முறை விளக்கப் பயிற்சி கோயம்புத்தூர் ஆர்.வி.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 30 மாணவர்களுக்கு 26.09.2019அன்று வழங்கப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் பயிற்சியின் நிறைவு விழாவிற்குத் தலைமை வகித்துப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கல்விச் சிறப்புப் பிரிவும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டமும் இணைந்து ''தேசிய ஊட்டச்சத்து இயக்க விழிப்புணர்வு'' நிகழ்ச்சியை 23.09.2019அன்று நடத்தின. ஒரத்தநாடு, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி அ. ராணி அவர்கள் விரிவுரை



வழங்கினார். மொத்தம் 56 நான்காம் ஆண்டு பி.வி.எஸ்சி மற்றும் ஏ.எச். பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

### ஊக்கப்படுத்தல் விரிவுரை

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பல்கலைக்கழக மாணவர் கலந்தாய்வு மற்றும் பணியமர்த்தல் பிரிவுமூலம் குடிமைப் பணித் தேர்வுகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் நோக்குடன் கல்லூரியின் நான்காம் ஆண்டு பி.வி.எஸ்சி மற்றும் ஏ.எச். பட்ட மாணவர்களுக்கு ஊக்கப்படுத்தல் விரிவுரைக்கு 26.09.2019அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னை கிங் மேக்கர்ஸ் ஐ.ஏ.எஸ் அகாடமி இயக்குநர் திரு. எஸ். ராஜ்சேகர் அவர்கள் சிறப்பு விரிவுரை வழங்கினார். இதில் 63 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

### சாலைப் பாதுகாப்பு மன்றத் துவக்க விழா

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் தமிழ்நாடு காவல் துறையும் சென்னைப் பத்திரிக்கையாளர் சங்கமும் இணைந்து ''தலைக்கவச விழிப்புணர்வுக் கருத்தரங்கு மற்றும் சாலைப் பாதுகாப்பு மன்றத்'' துவக்க விழாவை 25.09.2019அன்று கல்லூரி வளாகத்தில் நடத்தின. கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தஞ்சாவூர் சரகக் காவல் துணைத் தலைமை இயக்குநர் முனைவர் ஜே. லோகநாதன் இ.கா.ப. அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, சாலைப் பாதுகாப்பு மன்றத்தைத் துவக்கிவைத்து, ''தலைக்கவச விழிப்புணர்வு'' குறித்த ஓவியப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். தஞ்சாவூர், காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. ஜெயசீலன், ஒரத்தநாடு அரசு மருத்துவமனையின் முதன்மை மருத்துவ அலுவலர் மருத்துவர் வெற்றிவேந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஒரத்தநாடு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. இ .காமராஜ் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

### புத்தகக் காட்சி

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி நூலகம்மூலம் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயனடையும் வகையில் ''புத்தகக் காட்சி'' 24.09.2019 மற்றும் 25.09.2019ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. இதில் கால்நடை, விலங்குகள் மற்றும் உணவு அறிவியல் எனச் சுமார் 700 தனித்த தலைப்பிலான புத்தகங்கள் இடம்பெற்றன.

### நாட்டுநலப் பணித் திட்டம்

- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவின் 50ஆவது நிறுவன நாளை முன்னிட்டு மரக்கன்று நடும் நிகழ்ச்சி, மாதவரம் கால்நடைப் பண்ணை வளாகத்தில் 24.09.2019அன்று நடத்தப்பட்டது. மாதவரம், மாநிலத் தோட்டக்கலைப் பண்ணையின் உதவி இயக்குநர் திரு. எம். பிரபாகரன் அவர்கள் பனை மற்றும் பனைப் பொருள்களின் முக்கியத்துவம் குறித்து விரிவுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் 29 நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்கள் பங்கேற்று, 50 பனங்கொட்டைகளை நட்டனர்.
- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவும் கால்நடைப் பொதுச் சுகாதாரத் துறையும் இணைந்து, உலக வெறிநோய் தினத்தை – 2019 முன்னிட்டு ''வெறிநோய்த் தடுப்பூசி முகாம்'' மற்றும் ''கால்நடை நல முகாம்'' ஆகியவற்றைக் காஞ்சிபுரம் மாவட்டம்

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Date of publication : 25th and 26th of every month

பெறுநர்

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

மூணுாத்திகுப்பம் மற்றும் அதை ஒட்டியுள்ள கிராமங்களில் 28.09.2019அன்று நடத்தின. முகாம்களில் 57 நாய்களுக்கு வெறிநோய்த் தடுப்பூசியும், 140 புறக்கடைக் கோழிகளுக்கு இரத்தக்கழிச்சல் நோய்க்கு எதிராகத் தடுப்பூசியும், 26 மாடுகள் / கன்றுகள் மற்றும் 142 ஆடுகளுக்குச் சிகிச்சையும் குடற்புழு நீக்கமும் செயல்படுத்தப்பட்டன. மேலும், திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் வட்டம், காட்டூர் கிராமத்தில் 21.09.2019அன்று கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்பட்டு, 176 மாடுகள் / கன்றுகள் மற்றும் 176 ஆடுகளுக்குச் சிகிச்சையும் குடற்புழு நீக்கமும் செயல்படுத்தப்பட்டன. மேலும், 650 புறக்கடைக் கோழிகளுக்கு இரத்தக்கழிச்சல் நோய்க்கு எதிராகத் தடுப்பூசி போடப்பட்டது.

### நெகிழிக் கழிவு இல்லாமை குறித்த விழிப்புணர்வு




- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் 30.09.2019அன்று ‘‘கட்டுரை எழுதுதல் மற்றும் வரைபட வண்ணம் தீட்டுதல்’’ போட்டிகளும், 01.10.2019அன்று நெகிழிக் கழிவு இல்லாமை குறித்த விழிப்புணர்வு மற்றும் பேரணி தொடர்பான தூய்மையே சேவை என்ற தேசிய உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியும் நடத்தப்பட்டு, 30.09.2019முதல் 02.10.2019 வரை நெகிழிக் கழிவு இல்லாமை குறித்த விழிப்புணர்வு உண்டாக்கப்பட்டது.
- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் கல்லூரி வளாகத்தில் 26.09.2019அன்று மனிதச் சங்கிலிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, நெகிழிக் கழிவு இல்லாமை குறித்த விழிப்புணர்வு (தூய்மையே சேவை) உண்டாக்கப்பட்டது.

### பணி ஓய்வு

காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் திறனறி பணியாளர் (சிறப்பு நிலை) திரு. எம். வேதகிரி அவர்கள் 30.09.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 08.09.1959அன்று பிறந்த இவர், 32 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.




## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலச்சந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா